**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
**ஓ.எஸ்.70/2018**
**2026 – ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 – ம் நாள் திங்கள் கிழமை**
**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | **:** | **கற்பகவள்ளி** | **சாதி** | **:** | |
| **த/பெ** | **:** | | **சமயம்** | **:** | |
| **கிராமம்** | **:** | | **தொழில்** | **:** | |
| **வட்டம்** | **:** | | **வயது** | **:** | |

**வா.சா. 2 ஆஜர்.**
**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 2 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. மானாமதுரை வட்டம், வாகுடி குரூப், முத்தனேந்தல் கிராமத்தில் உள்ள புல எண் 464/11 சொத்து சம்பந்தப்பட்ட வீட்டுமனை ஒப்படைப்பு பதிவேடு கொண்டுவந்துள்ளேன். வீட்டுமனை ஒப்படைப்பு உத்தரவு எண் 106/1410 சம்பந்தப்பட்ட பதிவேட்டு புத்தகம் கொண்டுவந்துள்ளேன். மேற்படி ஒப்படைப்பு உத்தரவு சம்பந்தப்பட்ட பதிவேடு புத்தகத்தின் உண்மை நகல் மானாமதுரை வட்டாட்சியரின் சான்றொப்பம் பெற்று தாக்கல் செய்கிறேன். அது சாட்சி சான்றாவணம் 1 ஆகும்.

2. மேற்படி மானாமதுரை வட்டம் வாகுடி குரூப், முத்தனேந்தல் கிராமத்தில், சர்வே எண் 327/1 பி 3, சம்பந்தப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு சம்பந்தப்பட்ட பதிவேடு புத்தகம் கொண்டுவந்துள்ளேன். அதன் பட்டா மாறுதல் உத்தரவு எண் 774/2000 ஆகும். பட்டா மாறுதல் உத்தரவு சம்பந்தப்பட்ட பதிவேட்டை

கொண்டுவந்துள்ளேன். அந்த பட்டா மாறுதல் உத்தரவு மானாமதுரை சார்பதிவாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று கொண்டுவந்துள்ளேன். அது சாட்சி சான்றாவணம் 2 ஆகும்.

நான் சம்மனில் கண்டுள்ளபடி கொண்டுவந்துள்ளதாகச் சொல்லும் சாட்சி சான்றாவணம் 1 ல் கண்டுள்ள சொத்து மானாமதுரை தாலுக்கா, வாகுடி குரூப், முத்தனேந்தல் கிராமத்தில் உள்ள புல எண் 464/11 சம்பந்தப்பட்டது அல்ல என்றால் வீட்டுமனை உத்தரவு எண் 106/1410 ஐ கொண்டுவரச்சொன்னார்கள் வாகுடி குரூப்க்கு உரியது என்று சொல்லவில்லை.

வீட்டுமனை உத்தரவு எண் 106/1410 சம்பந்தப்பட்ட கோப்பை சம்மனில் கண்டுள்ளபடி கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் தவறான தகவல் சொன்னதனால் உங்கள் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எடுக்கக்கூடாது என்றால் சரியான தகவலைத் தான் சொல்லியுள்ளேன்.

நீங்கள் சொல்லும் சாட்சிய சான்றாவணம் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லை என்றால் சம்மனில் கண்டுள்ள வீட்டுமனை ஒப்படைப்பு எண் 106/1410 ஐ தான் கொண்டுவந்துள்ளேன்.

வீட்டுமனை ஒப்படைப்பு எண் 106/1410 கொண்டுவரவில்லை கொண்டுவராமலே கொண்டுவந்ததாக பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்கு மாறாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அலுவலகத்தில் உள்ள பதிவேட்டை தான் கொண்டுவந்துள்ளேன்.

நான் கொண்டுவந்துள்ள சாட்சிய சான்றாவணம் 2 ல் வாகுடி குரூப், புல எண் 327/ 1 பி 3 யார் பெயரில் தாக்கல் ஆகியுள்ளது என்றால் யார் பெயரில் தாக்கலாகியுள்ளது என்ற குறிப்பு இல்லை. பட்டா மாறுதல் உத்தரவு எண் சம்பந்தமாக என்ன குறிப்பு தாக்காலியுள்ளது என்றால் உத்தரவு எண் மு.மு. 774/2000, நாள் 06.06.2000 என்று கண்டுள்ளது.

தற்போது நான் மானாமதுரை தாலுக்க அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக 05.06.2025 ல் பொறுப்பில் வந்தேன். தற்போது

கொண்டுவந்துள்ள ஆவணங்கள் சம்பந்தமாக ச.சா.ஆ 1 மற்றும் 2 சம்பந்தமாக எனக்கு நேரடியாகத் தெரியாது ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் எந்த அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் அதை நான் அலுவலகத்தில் சரிபார்த்து தான் சொல்லமுடியும். அதில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மானாமதுரை என்று முத்திரை வைக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளதா என்றால் அலுவலகத்தில் சரிபார்த்து தான் சொல்லமுடியும். ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும்.

நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட படி சம்மனில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல. தமிழ்நாடு அரசு வழங்கிய ஆவணங்களுக்கு விரோதமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை 1, 2 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்</u>**

வீட்டுமனை ஒப்படைப்பு எண் 106/1410 தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் பாலகணேசன் த/பெ பழனிச்சாமி என்பவர் பெயரில் உள்ளது. புல எண் 327/1 பி 3 யின் பசலி எண் யார் பெயரில் உள்ளது என்றால் பதிவேட்டில் குறிப்பு இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

-Sd-
District Munsif,
Manamadurai.